**செய்தி வெளியீடு எண் : 102** **நாள் : 14.01.2023**

**மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் சென்னை, வள்ளுவர் கோட்டத்தில் அமைந்துள்ள திருவள்ளுவர் சிலைக்கு மலர்த்தூவி மலர் வணக்கம் செய்தல்**
**மற்றும் தமிழ்நாடு அரசின் 2023ஆம் ஆண்டின் திருவள்ளுவர் விருது, 2022ஆம் ஆண்டின் 6 விருதுகள் வழங்கிச் சிறப்பு செய்யப்படவுள்ளது.**

திருவள்ளுவர் திருநாளான தை 2ஆம் (16.01.2023) நாளன்று மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் சென்னை, வள்ளுவர் கோட்டத்தில் அமைந்துள்ள திருவள்ளுவரின் திருவுருவச் சிலைக்கு காலை 8.30 மணிக்கு மாலை அணிவித்து மலர் வணக்கம் செய்யும் நிகழ்ச்சியும், 2023ஆம் ஆண்டிற்கான திருவள்ளுவர் விருது இரணியன் நா.கு.பொன்னுசாமி அவர்களுக்கும் 2022ஆம் ஆண்டிற்கான பேரறிஞர் அண்ணா விருது திரு. உபயதுல்லா அவர்களுக்கும் பெருந்தலைவர் காமராசர் விருது ஈ.வி.கே.எஸ். இளங்கோவன் அவர்களுக்கும் மகாகவி பாரதியார் விருது முனைவர் ஆ.இரா.வேங்கடாசலபதி அவர்களுக்கும் பாவேந்தர் பாரதிதாசன் விருது திரு. வாலாஜா வல்லவன் அவர்களுக்கும் திரு.வி.க. விருது நாமக்கல் திரு.பொ. வேல்சாமி அவர்களுக்கும் கி.ஆ.பெ. விசுவநாதம் விருது கவிஞர்மு.மேத்தா அவர்களுக்கும் தந்தை பெரியார் விருது கவிஞர் கலி.பூங்குன்றன் அவர்களுக்கும் அண்ணல் அம்பேத்கர் விருது திரு.எஸ்.வி. ராஜதுரை மற்றும் தேவநேயப்பாவாணர் விருது முனைவர் இரா. மதிவாணன் ஆகியோருக்கும் வழங்கி சிறப்பு செய்யப்படவுள்ளது. மேலும், இந்நிகழ்ச்சியில் மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள், சீர் பெருமக்கள், தமிழறிஞர்கள், அரசு அலுவலர்கள் ஆகியோர் இந்நிகழ்ச்சியில் கலந்துகொண்டு சிறப்பிக்க உள்ளனர்.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**

அரசின் செய்திகளை உடனுக்குடன் தெரிந்துகொள்ள :

tndiprnews tndipr tndipr TN DIPR www.dipr.tn.gov.in